**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

Calendar .. .. )
)
Miscellaneous .. .. )
) **Sessions Case No. 30/2025**
Preliminary Register .. .. )
)
Sessions .. .. )

{ **Prosecution PW1**
{
Deposition of witness for PW. { Defence
{
{ Court

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர்)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **24th day of October 2025.**

முதல் விசாரணை **:** நான் தற்போது பணியிடை நிறுத்தத்தில் இருக்கிறேன். காரியாபட்டி வட்டம், T.கடம்பகுளத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது, 01.05.2024 ம் தேதி காலை சுமார் 8.30 மணியளவில் நானும், கிராம

உதவியாளர் மஜித்கனியும் அலுவலகத்தில் இருந்தபோது, டமார் என்ற வெடிசத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தபோது ஆவியூர் கீழஉப்பிலிகுண்டு ரோட்டில் உள்ள R.S.R குவாரி கிரஸர் பக்கம் உயரமாக புகை மண்டலமாக தெரிந்தது. நானும், கிராமஉதவியாளர் மஜித்கனியும் கிரஸர் பக்கம் சென்று பார்த்தபோது, கிரஸரின் தெற்குபக்கம் உள்ள வெடிமருந்து குடோனில் வெடிவிபத்து ஏற்பட்டு வெடிமருந்து குடோன் தரைமட்டமாயிருந்தது. குடோனின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த Explosive வண்டி TN76Z9644 என்ற வாகனம் சேதமடைந்து அங்கு நின்றிருந்தது. மற்றொரு வண்டியான TN76U6025 என்ற Explosive வண்டி முற்றிலும் சேதமடைந்திருந்தது. தேமடைந்திருந்த வண்டியின் பாகங்கள் 50 மீட்டருக்கு நான்குபுறமும் சிதறிகிடந்தது. குடோனின் வேலை பார்த்தவர்கள் உடல் பாகங்கள் நான்குபுறமும் சிதறிகிடந்தது. RSR கிரஸரில் கணக்குபிள்ளையாக வேலைபார்த்த குருநாதரிடம் நான் விசாரித்தபோது, அந்த குடோனில் மூன்றுபேர் வேலை பார்த்ததாக சொன்னார். பெரியதுரையும் குருசாமியும் தென்காசி மாவட்டத்தை சேர்ந்தவர்கள், கந்தசாமி என்பவர் மதுரை மாவட்டம், T.புதுப்பட்டியை சேர்ந்தவர்கள். மேற்படி விபத்து ஏற்பட்டதற்கான காரணத்தை நான் விசாரிக்கும்போது, மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் என தெரிந்தே போதிய பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் கொடுக்காமல் டெட்டனேட்டர் இருந்த வெடிமருந்து வேனையும், ஜெலட்டின் குச்சி இருந்த லோடு வேனையும் அருகே அருகே வைத்து லோடு ஏற்றினாலோ, இறக்கினாலோ இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவந்தது. மேற்படி விபத்திற்கு காரணமான வெடிமருந்து குடோன் உரிமையாளர் **ஸ்ரீராம்ஜி**, சேது, ராஜ்குமார், ராமமூர்த்தி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க புகார்மனு

கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார்மனுவில் அறிவேன் சாட்சியாக எனது கிராம உதவியாளர் மஜித்கனி கையொப்பமிட்டுள்ளார். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1**. போலிசார் என்னை மறுவிசாரணை செய்யும்போது ஸ்ரீராம்ஜி என்பவர் மேற்படி குவாரியிலிமருந்து முழுமையாக விலகிவிட்டார் என்பதாகவும், ராஜ்குமார் என்பவர்தான் License Holder என்பதும் GST லும் ஸ்ரீராம்ஜி என்பவர் நீக்கப்பட்டு ராஜ்குமார், சேது, ராமமூர்த்தி ஆகியோர் பெயர்கள் மட்டுமே பார்ட்டனாரா உள்ளதாக தெரிந்துகொண்டேன். மேற்படி ஸ்ரீராம்ஜி என்பவரை வழக்கிலிருந்து நீக்கம் செய்து அறிக்கை தயார் செய்த விவரம் தெரிந்துகொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நீங்கள் சொன்னநேரத்தில், சொன்னவிதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் - சரியல்ல. காவல்துறையினர் கேட்டுகொண்டதற்கிணங்க அவர்கள் தயார் செய்த புகார்மனுவில் நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றுசொன்னால் - சரியல்ல. பாதுகாப்பு உபகரணங்கள் என்ன என்ன கொடுக்கப்பட வேண்டும் என்றும், இரண்டு வாகனங்கள் அருகே நிறுத்தப்படக்கூடாது என்று எந்த விதிகளின் படி குறிக்கப்பட்டுள்ளது என்ற விவரங்கள் உங்களுக்கு தெரியாது என்றுசொன்னால் - சரிதான். அதேபோல் உங்களது புகாரில் நீங்கள் என்ன என்ன பாதுகாப்பு குறைபாடுகள் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியாது என்றும், உங்களது மேல்அதிகாரிகள் சொன்னதன் அடிப்படையில் அந்த தகவலை குறிப்பிட்டு புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் - சரியல்ல. RSR நிறுவனம் உரிய அதிகாரிகளிடம்

உரிமம்பெற்று நடத்திவந்த நிறுவனம் என்றால் - சரிதான். இவ்வழக்கில் இறந்த மூன்று நபர்களும் வெடிபொருட்கள் அருகில் வேலை பார்ப்பதற்கு தகுந்த உரிமம் பெற்றுதான் அவர்கள் சம்பவதினத்தன்று பணியில் இருந்தார்கள் என்றால் - சரிதான். அதேபோல் வெடி விபத்துக்குள்ளான அந்த இரண்டு வாகனங்களும் மேற்கண்ட வெடிபொருட்களை ஏற்றுவதற்கான உரிமம் பெற்ற வாகனங்கள் என்றால் - சரிதான். இந்த வெடிவிபத்தில் இறந்த குடும்பத்தாருக்கு உங்களுடைய வருவாய்துறை மற்றும் காவல்துறை அலுவலகங்கள் முன்னிலையில் நஷ்டஈடு வழங்கப்படும் என்றால் - சரிதான். நீங்கள் சத்தம்கேட்டுதான் சம்பஇடத்திற்கு சென்றீர்கள் என்றும், சம்பவஇடத்தில் ஏற்கனவே போலிசார் இருந்தார்கள் என்றால் - சரிதான். உங்கள் புகார்மனுவில் நீங்கள் குறிப்பிட்டு சொன்ன காரணங்கள் இந்த விபத்திற்கு உண்மையான காரணங்கள் இல்லை என்றால் - சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**